# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.367/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | ஜெயபால் |
| தேதி | :- | 08–09–2025 |

**சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

நான் விவசாயத் தொழில் செய்கிறேன். மாட்டுப் பண்ணை வைத் துள்ளேன். பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் தூரத்து உறவினர். 01.03.2014-ஆம் தேதியன்று நான் கடன் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு கொடுப்பதற்குமுன் எப்போது பணம் வேண்டும் என்று என்னிடம் கேட்டார் என்றால் அன்றிலிருந்து 10 நாட்களுக்குமுன் கேட்டார். 01.03.2014-ஆம் தேதியன்று நான் பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் 8 இலட்சம் உரூபாய் கொடுத்தேன். அவ்வாறு கொடுத்த அன்று நான் என்ன ஆவணம் எழுதி வாங்கினேன் என்றால் கடனுறுதிச் சீட்டு. அந்த கடனுறுதிச் சீட்டை நான் இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். காசோலை கொடுத்தபோது அதை அவர் திருப்பிப் பெற்றுக்கொண்டார். அந்தக் கடனுறுதிச் சீட்டை யார் எழுதியது என்றால் பிரதிவாதிதான் எழுதி எடுத்து வந்தார். தற்போது அது குறித்து எனக்கு நினைவில்லை. நான் உண்மையில் கடன் கொடுத்திருந்தால் யார் கடனுறுதிச் சீட்டை எழுதியது என்றும் யார்

அதில் சான்றொப்பம் இட்டது என்றும் எனக்குத் தெரிந்திருக்கும் என்றும் நான் கடன் கொடுக்காததால்தான் எனக்கு அந்த விவரங்கள் தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி என்னிடம் ஒருபோதும் கடன் வாங்கவில்லை என்றும் அதற்காக ஒருபோதும் கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

30.09.2015-ஆம் தேதியன்று ஒரு காசோலைக்கு 5 இலட்சம் உரூபாய் வீதம் இரண்டு காசோலைகளை பிரதிவாதி எனக்குக் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 8 இலட்சம் உரூபாய்க்கு 10 இலட்சம் மதிப்பிற்கு எதற்காக காசோலை கொடுத்தார் என்றால் வட்டிக் கணக்கிட்டுக் கொடுத்தார். அன்று சான்றாளராக யாராவது இருந்தனரா என்றால் இல்லை.

நான் இரண்டு காசோலைகளையும் வங்கியில் பணமாக்கச் செலுத்தி அவை இரண்டும் 06.11.2015-ஆம் தேதியன்று மதிப்பு மறுக்கப்பட்டன என்றால் சரிதான். 06.11.2015-ஆம் தேதியன்று நான் வழக்குரைஞர் மூலம் மாற்றுமுறையாவணங்கள் சட்டப்படி அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை 12.11.2015-ஆம் தேதியன்று பிரதிவாதி வாங்கினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் காசோலையை வங்கியில் முன்னிட்ட விவரமும் நான் அறிவிப்பு அனுப்பிய விவரமும் பிரதிவாதிக்குத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வந்து குற்ற வழக்குத் தொடுக்க வேண்டாம் என்று சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி என்னை பார்க்கவும் இல்லை என்னிடம் சமாதானம் பேசவுமில்லை என்றால் சரியல்ல.

அந்தக் காசோலைகளை மீண்டும் நான் பணமாக்க வங்கியில் செலுத்தினேன் என்றால் சரிதான். அந்தக் காசோலை மீண்டும் மதிப்பு மறுக்கப்பட்டதால் 08.12.2015-ஆம் தேதியன்று நான் வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பிரதிவாதி வாங்கவில்லை என்றால் வாங்கிக்கொண்டார். அஞ்சலக ஒப்புகையில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் அது எனக்குத் தெரியாது.

நான் பிரதிவாதிமீது சேலம் 05-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் STC 2083/2016 என்ற வழக்கைத் தொடுத்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு பின்னிட்டு நில அபகரிப்பு நீதிமன்றத்திற்கு மாறியது என்றால் சரிதான். அங்கு STC 244/2018 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்தப் புகாரில் பிரதிவாதி கடனுறுதிச் சீட்டை வாங்கிக் கொண்டு காசோலை கொடுத்தார் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்குத் தொடுப்பதற்குமுன் பிரதிவாதி என்னை சந்தித்து சமாதானம் பேசினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நடந்த பேச்சு வார்த்தையில் 03.01.2016-ஆம் தேதியன்று 10,68,000/- உரூபாய்க்கு பிரதிவாதி ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்தக் கடனுறுதிச் சீட்டில் நெய்க்காரப் பட்டி இளந்தோப்பு சாய்ராம் கார்டன் கதவு எண் 3-763-1 என்ற விலாசத்தில் வசிக்கும் பெருமாள் மகன் ஜெயபால் ஆகிய நான் எழுதிக் கொடுக்கும் கடனுறுதிச் சீட்டு என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான். அதை பிரதிவாதிதான் தட்டச்சுச் செய்து எடுத்துவந்தார். அந்தக் கடனுறுதிச் சீட்டை

பிரதிவாதி என் கடனுக்காக எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதிலுள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. அந்தத் தேதியில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே பணம் கொடுக்கப்பட்டது.

03.01.2016-ஆம் தேதியிட்டக் கடனுறுதிச் சீட்டில் தங்களுக்கோ தங்கள் உத்தரவு பெற்றவருக்கோ செலுத்துவதாக உறுதிகூறி கடனுறுதிச் சீட்டு நிறைவேற்றப்படுவதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். அந்த நாளில் நான் பணம் எதுவும் கொடுக்காததால் மேற்சொன்ன வாசகங்களை குறிப்பிட்டு எழுதியது கடனுறுதிச் சீட்டே ஆகாது என்றால் சரியல்ல. 03.01.2016-ஆம் தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிக்கை ஏற்பட்டதாக சொல்லி தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். சரியான முத்திரைக் கட்டணம் இல்லாமல் அது எழுதப்பட்டுள்ளதால் அது செல்லாது என்றால் சரியல்ல. அந்த முச்சலிக்கையில் 05 மாத காலத்திற்குள் திருப்பிக் கொடுத்துவிடுவதாக பிரதிவாதி சொன்னதுபோல் வாசகம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் பதிவுசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்சொன்ன கடனுறுதிச் சீட்டிலும் பஞ்சாயத்து முச்சலிக்கையிலும் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி எனக்குக் கொடுத்த காசோலைகள் இரண்டும் 01.03.2014 ஆம் தேதியன்று பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடனுறுதிச் சீட்டுக் கடனை திருப்பிக் கொடுப்பதற்காக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் வீட்டுமனை வணிகம் செய்தபோது நான் அதிக முதலீடுசெய்ததால் பிணையத்திற்காக பிரதிவாதியிடம் இருந்து

மேற்சொன்ன இரண்டு காசோலைகளை வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் வீட்டுமனை வணிகத் தொழில் எதுவும் செய்யவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தொடுத்த மேற்சொன்ன காசோலை மோசடி சம்மந்தமான குற்ற வழக்கு தள்ளுபடிச் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் மேல்முறையீடு தாக்கல்செய்துள்ளேன். பிரதிவாதி என்னிடம் ஒருபோதும் கடன் வாங்கிய தில்லை என்றும் அதற்காக ஒருபோதும் கடனுறுதிச் சீட்டோ, பஞ்சாயத்து முச்சலிக்கையோ எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அந்த ஆவணங்கள் யாவும் என்னால் புனையப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் கண்டுள்ள சான்றாளர்கள் யாரையும் பிரதிவாதிக்குத் தெரியாது என்றால் சரியல்ல. ஒரே தேதிபோட்டு 5 இலட்சம் உரூபாய் வீதம் இரண்டு காசோலைகளை எனக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல.

2010-ஆம் ஆண்டிற்கும் 2013-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் நானும் பிரதிவாதியும் செய்துவந்த வீட்டுமனை வணிகம் சம்மந்தமாக பிரதிவாதியால் பிணையத்திற்காக கொடுக்கப்பட்டவைதான் மேற்சொன்ன இரண்டு காசோலைகளும் என்றால் சரியல்ல. நான் பொய் வழக்குப் போட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.